3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மசோதா, 1967-ம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அம்மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதி கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவை இந்த மன்றத்தின்முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவர் சுருக்கமாக ஏதாவது சொல்ல வேண்டுமானால் அவர்களுக்கு அனுமதி உண்டு.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மசோதாவை மன்றத்தின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1967-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கு மேன்மைமிகு கவர்னர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அம்மசோதாவை அறிமுகப் படுத்த பேரவையின் அனுமதி கோருவார்கள்.